[திரு. மு.க. ஸ்டாலின்] [2006 ஆகஸ்ட் 7

செய்யும் நீர் உறிஞ்சும் கிணறு மற்றும் உறை கிணறு ஆகியவற்றில் நீர் சுரப்பு குறைந்துள்ளதால் வல்லிபுரம் பாலாற்று குடிநீர்த் திட்டம் மூலம் 3 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. உள்ளூர் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக தினசரி 5.12 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மேலும், திருக்கழுக்குன்றத்திலே 120 இந்தியா மார்க்–2 பம்புகள் 37 திறந்தவெளிக் கிணறுகள்மூலம் தற்போது தண்ணீர் எடுத்து, பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது திருக்கழுக்குன்றம் ஏரியில் உள்ள கிணற்றிலிருந்து தினசரி 6 இலட்சம் லிட்டர் தண்ணீர் எடுத்து பேரூராட்சிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இப்பேரூராட்சியிலே 21 இடங்களில் 8.4 இலட்சம் ரூபாய் செலவிலே இந்தியா மார்க்–2 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த முயற்சி நிறைவேற்றப்படக்கூடிய சூழ்நிலையில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சியினுடைய குடிநீர்த் தேவை முழுவதும் தீர்க்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க....... (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த subject–க்கு வந்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்த அலுவலுக்கு வந்தாகிவிட்டது. உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்.(குறுக்கீடு) சரி, திரு. தி. வேல்முருகன்.

2. தகவல் கோரல்– தொடர்ச்சி

(ஆ) சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பில் மின்தூக்கி அடிக்கடி பழுதாகிவிடுதல்

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசினர் தோட்ட வளாகத்திலே இருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்குகின்ற அந்தக் குடியிருப்பு விடுதிகளில், அதுவும்

குறிப்பாக D–5 D விடுதியில் நான் ஐந்தாவது தளத்தில் தங்கி இருக்கிறேன். அங்கே அண்ணன் சிவபுண்ணியம் அவர்களும், அண்ணன் ஆறுமுகம் போன்றவர்களும் இருக்கிறோம். நாங்கள் சட்டப் பேரவைக் கூடிய நாளிலிருந்து, வருவதற்கு கிளம்புகிற போதெல்லாம், அங்கே இருக்கின்ற மின் தூக்கி அடிக்கடி பழுது ஏற்பட்டு, நாங்கள் அதிலே மாட்டிக்கொள்கிறோம். நான் மட்டும் 5 முறை மாட்டிக் கொண்டு தவித்திருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதை, பிறகு வந்து பேசுங்கள். நான் ஏற்பாடு பண்ணச் சொல்கிறேன். (குறுக்கீடு) பிறகு வாருங்கள். பிறகு அறையிலே வந்து சொல்லுங்கள். நான் ஏற்பாடு பண்ணச் சொல்கிறேன். பிறகு வாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மின் தூக்கியில் வேல்முருகன் மாத்திரம் வந்தால் பரவாயில்லை. சிவபுண்ணியமும் வருவதால் ஏதாவது சிரமம் ஏற்பட்டு இருக்கலாம். (சிரிப்பு)

4. விதி 110—ன்கீழ் அறிக்கை

கிருஷ்ணா நதிநீர் பெறுவது மற்றும் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதாக வந்துள்ள செய்திகள் தொடர்பாக ஆந்திர அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தை – மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகருக்கு தற்போது நாளொன்றுக்கு 640 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளான பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகளில் தற்போது சுமார் 1.5 டி.எம்.சி. தண்ணீர் உள்ளது. இந்நிலையில் கிருஷ்ணா நதிநீரை உடனடியாகப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.